
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V*.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P*.பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

## முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# ஒப்பியல் நோக்கில் - சைவ கிறிஸ்தவ குருத்துவம்

பூபாலசிங்கம் தனேஸ்,

அபிவிருத்தி உத்தியோகத்தார், வலயக்கல்வி அலுவலகம்,

யாழ்ப்பாணம், இலங்கை

*Poobalasingam Thanesh, Development officer, Zonal education office, Jaffna, Sri Lanka*

**ஆய்வுச்சுருக்கம்**
குருத்துவம் என்பது சர்வ மதங்களிலும் உள்ளமையை நாம் காண்கின்றோம். எல்லா மதங்களும் உரித்தான தொன்றாகக் காணப்படுகின்றது. மக்களை நல்நெறிப்படுத்துவதற்காக இறையாசியின் வழியே குருநிலைப் பெற்ற குருமார்கள் குணம் குறிகள் அற்ற இறைவனை வழிபடுவதற்கு முறைப்படி வழிப்படுத்தும் ஒரு இடை நிலையாளராக குருக்கள் சைவ ஆலயங்களிலும் சரி கிறிஸ்தவ ஆலயங்களிலிலும் சரி காணப்படுகின்றமையை நாம் காணக் கூடியதாகவுள்ள போதும் அனைத்திற்கும் மூல முதல் குருவாக இறைவனே கொள்ளப்படுகின்றார்.

ஒப்பியல் நோக்கில் - சைவ கிறிஸ்தவ குருத்துவ நிலை தொடர்பான விடயதானங்கள் ஒப்பீட்டு ரீதியில் ஆராயப்பட்டு ஆய்வின் நோக்கமான இரு சமயங்களிலும் வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும் அவற்றுக்குள்ளே காணப்படுகின்ற ஒருமைப்பாடு காணப்படுகிறது. என்கிற அடிப்படையில் ஆய்வுக் கருதுகோளான சைவ கிறிஸ்தவ குருத்துவ நிலையில் காணப்படுகின்ற விடயதானங்கள் தொடர்பில் ஒற்றுமைத் தன்மை காணப்படுகின்றது. என்கிற வகையில் ஒப்பீட்டு பகுப்பாய்வு முறையினை பின்பற்றி அத்துடன் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையினூடாக இரு சமயங்களும் குருத்துவத்தின் தோற்றம் என்கிற அடிப்படையிலும் குருத்துவத்தில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நீரின் மகத்துவம் என்கிற அடிப்படையிலும் குருத்துவ நிலையில் இறைவனானவர் தன்நிலையில் இருந்து கீழ் இறங்கி வந்து மக்களுக்கு நல்லுபதேசங்களை வழங்குகின்றார் என்கிற அடிப்படையிலும் குருத்துவ நிலையில் வர்ணக் கோட்பாடு என்கிற அடிப்படையில் குருத்துவ நிலையில் கடமையை கடமையாகச் செய்வதன் ஊடாக இல்லறத்தவனாக இருந்தால் என்ன? துறவறத்தவனாக இருந்தால் என்ன? அவன் விடுதலைக்கு வழி சமைத்தவன் ஆகின்றான் என்கிற அடிப்படையிலும் ஒப்பியல் நோக்கில் ஆராயப்பட்டு வேற்றுமைகள் காணப்படுகின்ற போதும் ஒற்றுமை காணப்படுகின்றது என்கிற ஆய்வு முடிவினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

ஒப்பியல் நோக்கில் - சைவ கிறிஸ்தவ குருத்துவ நிலையின் அடிப்படையில் நோக்கும் போது வேறுபாடுகள் காணப்படுகின்ற போதும் ஒற்றுமைப்பாடுகளும் காணப்படுகின்றன. என்பதோடு இவ்வுலக வாழ்வில் மானுடர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடனேயே சமயங்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஒற்றுமைப்பண்புகளை இணங்காணுவதன் ஊடாக சமூகத்தில் சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி சமத்துவத்தினையும் சகோதரத்துவத்தினையும் ஏற்படுத்தி சமூக நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முடியும். என்கிற அடிப்படையில் நிறைவுரை அமைவுறுகின்றது.

***திறவுச்சொல்:*** *குருத்துவம் தீட்i~ திருவருட்சாதனம்*

**மொழிப் பிரயோகம்**
சைவ சமயத்தில் குருத்துவத்தின் நிலைப்பாட்டினையும் அதன் ஊடான சமூகத்திற்கான கருத்துக்களையும் கிறிஸ்தவ சமயத்தில் குருத்துவ நிலைப்பாட்டினையும் அதன் ஊடான சமூக கருத்துக்களையும் ஒப்பீடு செய்து அவற்றிற்கிடையேயான

ஒற்றுமைப்பாடுகளையும் முரண்பாடுகளையும் ஆய்வு செய்து அதன்வழி சமூக நல்லிணக்கத்திற்கான சமூக ஒப்புறவுகானதுமான கருத்துக்களை வெளிக்கொணர்தலே நோக்கமாக அமைகிறது.

மொழி என்பது ஒன்றினை விளங்குவதற்காகவும் புரிந்துகொள்ளச் செய்வதற்குமான ஒரு ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. என்பதே தத்துவவியலாளர் மற்றும் மொழியியலாளர்களின் கருத்தாக அமைகிறது. விளங்கிக்கொள்ளல் புரிந்துகொள்ளல் என்றவற்றை வெளிப்படுத்த மொழியின் செழுமை பிரதானமான காரணியாக அமைகிறது. மொழிவழி விடயதானங்களைப் புரிந்துகொள்ளல் என்பது பெருமளவில் சந்தர்ப்ப சூழ்நிலைகளை தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்பதே மேற்கத்தேய சமகால தத்துவவியலாளரான விக்கின்ஸ்ரைனின் கருத்தாகும். மேலும் மேற்கத்தேய மெய்யியலாளரான கில்பேட்ரைல் என்பவரின் கருத்தின் பிரகாரம் பொருள் காட்ட முடியாத பொதுச் சொல்களும் காணப்படும் என்பதை அவதானத்தில் கொண்டு அத்தகைய சொற்கள் எத்தகைய அர்த்தம் உள்வாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை கவனத்தில் எடுத்து இவ் ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**குருத்துவத்தின் தோற்றம்**

தோன்றிய இரண்டு சமயக் குருத்துவ சூழல் பின்னணியினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிடும் பொழுது சில அடிப்படை உண்மைகளைக் கண்டு கொள்ளக்கூடியதாகவுள்ளது. இந்து சமயமானது காலங்காலமாக பேணிப் பாதுகாத்து வளர்ச்சியடைந்து வந்துள்ள தன்மையை காணக் கூடியதாகவுள்ளது. குருத்துவம் என்பது குரு சி~;ய மரபில் இந்து சமய வரலாற்றில் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. இருக்குவேதத்தில் வரும் ஒரு பாடல் இந்திரனையே ஆசாரியனாகக் குறிப்பிடுகின்றது. குருகுலத்தின் தலைவர் குலபதியாவார். குருகுலங்கள் பற்றிய விபரங்கள் மகாபாரதத்திலும் உள்ளன. நைமிசாரண்யம் என்ற குருகுலத்தின் தலைவராக இருந்தவர் சௌநகர். சகுந்தலையின் வளர்ப்புத் தந்தையாகிய கண்வரியும் ஒரு குலபதியாவர். குரு தான் மரபுவழிப் பெருமையும் பாரம்பரியச் சிறப்பும் பொருந்தியவர் என்பதைச் சீடனுக்கு உணர்த்த இந்த ஆச்சிரமக் கல்வி சிறந்த சந்தர்ப்பத்தை அவருக்கு அளித்தது. ‘குரு’ என்ற சொல்லும் ‘ஆசிரியர்’ என்ற சொல்லும் ஒரே பொருளில் வழங்கப்படுகின்றன. ‘ஆசாரியர்’ என்ற சொல் ‘ஒழுக்கத்தில் சிறந்து விளங்குபவர்’ என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்கமுறையில் நடந்து காட்டுவது ஆசாரியனுக்குரிய பண்பாக அமைந்தது. இப்படியாக காலம் காலமாக குருத்துவம் வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை காணக் கூடியதாகவுள்ளது.
அதே போலவே இயேசுக் கிறிஸ்துவும் தனது இறுதி இராப் போசனத்தின் போது பன்னிரு சீடர்களினதும் கால்களை தானே கழுவி இராப் போசனத்திற்கு அழைத்துச் சென்றார். இது யூதர் வம்சத்தினரிடைய அடிமைகளே இவ்வாறு விருந்தினர்கள் வரும் போது கால்களை கழுவி விடும் வழக்கம் காணப்பட்டது. அதன் மூலமாக ஏழ்மை தூய்மை கற்பு என்பதனை விளக்கும் வகையில் தனது குருத்துவநிலையை வெளிப்படுத்தியிருத்தமையை காணக் கூடியதாகவுள்ளது.
இயேசு கிறிஸ்து போஜனத்தை விட்டொழுந்து வஸ்திரங்களை கழற்றி வைத்துவிட்டு ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக் கொண்டு பின்பு பாத்திரத்திலே தண்ணீர் வார்த்து சீடருடைய கால்களைக் கழுவவும் தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். (யோவான் 13: 4-5) சீடர்களை நோக்கி இயேசு கிறிஸ்து நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள் நீங்கள் சொல்வது சரியே நான் அவர்தான் ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவின துண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களைக் கழுவக்கடவீர்கள். (யோவான் 13: 13-14) என்று எடுத்துரைப்பதன் வழியோ சீடர்களுக்கான குருத்துவப் பணியினை தொடங்கி வைப்பதனை காணக் கூடியதாகவுள்ளது.

**குருத்துவத்தில் ஏகத்துவம்**

சைவம் சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டமைகின்றதனைக் காணக் கூடியதாகவுள்ளது. அந்த வ்யில் ஏகம் என்கின்ற அதாவது தனி ஒன்று என்கின்ற கருத்தினை சைவ சமயத்தின் முடிந்த முடிவான சைவ சித்தாந்தம் முழுமையிலும் உள்வாங்கி காணப்படுகிறது. இதை எளிமையாக

குறிப்பிடின் பகவத் கீதையின் அடிப்படையில் சொல்பவன் செய்பவன் பயனை ஏற்பவன் எல்லாம் ஒருவனே இக்கருத்தமைவு இந்து சமயத்தில் ஆரம்பகாலத்திலிருந்தே வளர்ந்து வருகிறது. ''ஏகம் சத் விப்ரா பஃகுதா வதந்தி....'' என இருக்குவேதம் குறிப்பிடுகின்றது. இதனை இறைவன் ஒருவனே எனினும் பலவென்று சொல்வார்கள் என்பர்.

இதனை உபநிடதமும் பசுக்கள் பல வண்ணங்களில் இருந்தாலும் அவை தரும் பாலின் நிறம் வெண்மையே என்று குறிப்பிடுகிறது. சைவ சித்தாந்தத்தில் சிவன் மேற்குறித்த கருத்தமைவையே நீ செய்யும் கருமங்கள் அனைத்தும் என்னையே சேர்கின்றன என்கின்றார். கிரு~ணராக கண்டாலும் அல்லாஹ்வை கண்டாலும் கர்த்தராகக் கண்டாலும் அவையாவும் பரமாத்மாவின் வடிவங்களே திருமூலர் திருமந்திரத்தில் மூலம்

உளன் எனில் உளன் அவன் உருவம் இவ் உருவுகள்
உளன் அலன் எனில் அவன் அருவம் இவ் அருவுகள்
உளன் என இலன் என இவை குணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு ஒழிவு இலன் பரந்தே. *(1-1-9)*

இறைவன் உள்ளான் என்றால் உள்ளான். உளனலன் (இல்லை) என்றால் இல்லை. உள்ளவனாகவும் இல்லாதவனாகவும் ஒழிவில்லாமல் எங்கும் பரந்துகிடக்கிறான். சைவசித்தாந்த சாஸ்திரநூல்கள் இறைவன் உருவமாயும் அருவமாயும் அருவுருவமாயும் அறிவாயும் விளங்குவான் எனக் குறிப்படுகின்றது. சிவபுராணம் ''ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க...'' எனக் குறிப்பிடுகின்றது. திருவாசகம் ''எல்லா உலகமும் ஆனாய் நீயே...'' எனக் குறிப்பிடுகிறது. இதற்கு ஈடு இணையான கருத்தமைவு மேலைத்தேய மெய்யியலாளரான ஸ்பினோசாவிடவும் காணப்படுகிறது. இயற்கையும் இறைவனும் ஒரு திரட்டுப் பொருளின் இரு பெரும் பகுதிகளே என்கின்றார். கிறிஸ்தவத்திலே இறைவன் ஏகனே ஒருவனே என்கின்ற கருத்தமைவைத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது. அனைத்தையும் படைத்த ஒரே கடவுள் தமது இறைத்தன்மையில் ஒருவராகவும் ஆள்த்தன்மையில் மூவராகவும் விளங்குகிறார். இந்த ஒரே கடவுள் தம் எல்லையற்ற புனித இயல்பிலும் எல்லாம் வல்லத் தன்மையிலும் எல்லையற்ற ஞானத்திலும் பராமரிப்பிலும் சித்தத்திலும் அன்பிலும் ஒரே ஒருவராய் இருக்கிறார். தம்மையே மோசேக்கு வெளிப்படுத்தியது போன்று இவர் தம்மிலே தாமாய் இருக்கிறார். திருத்தூதர் யோவான் நமக்கு போதிப்பது போல் இவர் அன்பாய் இருக்கிறார். இவர் எட்டாத ஒளியில் வாழ்பவர் எல்லாப் பெயர்களுக்கும் அனைத்துப் பொருட்களுக்கும் படைக்கப்பட்ட எல்லா அறிவுக்கும் அப்பாற்பட்டவர். எனினும் இவர் தம்மையே நமக்கு வெளிப்படுத்த விரும்பினார். தந்தை மகன் தூய ஆவி என்று தம்மையே வெளிப்படுத்தும் கடவுள் ஒருவரே இந்த இயல்பைப் பற்றிய சரியான நிறைவான அறிவை நமக்கு தர முடியும்

ஆகவே ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கும் பொழுது சைவத்திலும் கிறிஸ்தவத்திலும் ஒரு கடவுட் கோட்பாடே ஆகும். இரண்டு சமய குருத்துவ அடிப்படையில் கருத்தமைவு ஒன்றாகவே காணப்படுகிறது.

**குருத்துவத்தில் நித்திய குரு**

இந்து சமயத்தினைப் பெறுத்தவரையில் சிவபொருமானே நித்திய குரு ஆவார். 'குரு' என்ற பெயர் 'அறியாமையை நீக்குபவர்' என்ற பொருளைத் தரும். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் திருவருள்தான் என்ற கருத்தினைத் திருவருட்பயன் என்ற நூல் எடுத்துக்கூறும்:

அறியாமை உள்நின் (று) அளித்ததே காணும்
குறி ஆகி நீங்காத கோ

ஆத்ம ஞானம் தானாக விளங்கமாட்டாது. அதை விளங்கச் செய்வதற்கு ஞானாசாரியன் வேண்டும். ஆன்ம ஞானத்தை அடைவதற்கு ஞானாசாரியன் இன்றியமையாதவன். 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்ற நிலையில் குரு இந்துப் பாரம்பரியத்தில் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். அறியாமையில் சிக்குண்டு அல்லற்படும் ஆன்மாக்களுக்கு உரிய வழிகாட்டுவதற்கு இறைவனின் திருவருளே குருவாகத் தோன்றுகின்றதென்ற கருத்து இங்கு நோக்கத்தக்கது. அதே போலவே இயேசுக் கிறிஸ்துவே நித்திய குரு 'பன்னிரு

சீடர்களையும் அணுகி விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும். எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்' என்றார் (மத் 28:18-19).' திருமுழுக்கு ஓர் கருவறை (யோவான் 3:1-8) எவ்வாறு கருவறையில் ஓர் உயிர் உருவாக்கப்படுகிறதோ அவ்வாறு திருமுழுக்கில் கிறிஸ்தவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். எனவேதான் தெர்த்தூலியன் என்ற திருத்தந்தை 'கிறிஸ்தவர்கள் யாரும் பிறப்பதில்லை. மாறாக உருவாக்கப்படுகிறார்கள்.'

தூய பவுல் திருமுழுக்கு பற்றி பல மகத்தான உண்மைகளை நம் கண்முன் நிறுத்துகிறார். திருமுழுக்கின் ஊடாக கிறிஸ்துவின் மரணத்தோடும் உயிர்ப்போடும் இணைக்கப்பட்டுள்ளோம். திருமுழுக்கின் போது தண்ணீரில் முழ்குவதை கிறிஸ்துவோடு மரணத்தில் இணைக்கப் படுவதையும் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதையும் நீரில் இருந்து எழும்புதல் கிறிஸ்துவோடு உயிர்ப்பில் இணைக்கப்படுவதையும் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதையும் நீரில் இருந்து எழும்புதல் கிறிஸ்துவோடு உயிர்ப்பில் இணைக்கப்பட்டு எழுப்புவதையும் குறித்துக் காட்டுகிறது (உரோ 6:3-4) ஆகவே ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கும் பொழுது சைவத்தில் அறியாமையை போக்கி ஆண்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் அமைவுறுவதோடு கிறிஸ்தவத்தில் திருமுழுக்கு ஊடாக தண்ணீரில் முழ்குவதை கிறிஸ்துவோடு மரணத்தில் இணைக்கப்படுவதையும் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதையும் நீரில் இருந்து எழும்புதல் கிறிஸ்துவோடு உயிர்ப்பில் இணைக்கப்படுவதையும் கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதையும் நீரில் இருந்து எழும்புதல் கிறிஸ்துவோடு உயிர்ப்பில் இணைக்கப்பட்டு எழுப்புவதையும் கிறிஸ்த பணி வாழவில் இணைக்கும் தன்மையை குறித்துக் காட்டுகிறது. ஆந்த வகையில் இரு சமயமும் ஆண்மாவின் அறியாமையை போக்கும் வகையில் கருத்தமைவு ஒன்றாகவே காணப்படுகிறது.

**குருத்துவத்தில் சடங்குகளும் சம்பிரதாயங்களும்**

இந்துக்களின் பாரம்பரியத்தினை எடுத்து நோக்கும் போது சடங்குகள்குகள் சம்பிரதாயங்கள் என்பன பெரிதும் பேணிப் பாதுகாக்கும் ஒரு விடயமாக இருந்து வருகின்றமையை காணக் கூடியதாகவுள்ளது அந்த வகையில் கங்கை நீரில் நீராடுதல் மூலமாக 'பாவங்கள் தோ~ங்கள் நீங்கும்' என்கின்ற நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுவது போலவே கிறிஸ்தவர்களும் இவ்வுலக வாழ்வில் சஞ்சரித்த பாலரர்களுக்கு ஞானஸ்தானம் வழங்குவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. ஞானஸ்நானம் (டீயிவளைஅ) என்பது கிறித்தவத்தில் நீரைப் பயன்படுத்தி செய்யப்படும் சமயம் சார்ந்த கழுவுதல் சடங்காகும். இது ஒருவரின் பிறப்புநிலைப் பாவத்தையும் செயல்வழிப் பாவத்தையும் போக்கி கிறிஸ்துவோடு ஒருவரை இணைத்து அவரைக் கடவுளின் பிள்ளையாகவும் திருச்சபையின் உறுப்பினராகவும் ஆக்குகின்ற அருட்சாதனமாகக் கருதப்படுகின்றது. ஆகவே ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கும் பொழுது சைவத்திலும் கிறிஸ்தவத்திலும் கங்கையின் பெருமையை மிகவும் சிறப்பாக எடுத்தியம்புவதன் ஊடாக இரண்டு சமயத்தினதும் கருத்தமைவு ஒன்றாகவே காணப்படுகிறது.

**குருத்துவத்தில் இறைவனுக்கும் மனிதர்க்கும் இடையேயான உறவுநிலை**

சிவனே முதல் குரு என்பதும் உயிரினங்களின் நல்வாழ்விற்காக இறையருளால் தோன்றியவரே குரு எனவும் திருமூலர் கூறியுள்ள அரிய கருத்துக்கள் சிந்தனைக்குரியன:

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே

இக்காரணத்தினாலேயே குருவாகிய இறைவனைச் சிவமென்று குறிப்பிட்டனர் சித்தாந்திகள். பேரின்பத்தை நாடி வரும் மாணவமணிகளை ஆலமரத்தடியில் அமரச்செய்து உண்மை விளக்கம் தருவது பண்டைய மரபாகும். இறைவன் தக்~ணாமூர்த்தியாகக் கல்லால விருட்சத்தின் கீழ் சனகாதி முனிவர் நால்வர்க்கும் உபதேசம் செய்தருளியமை இங்கு குறிப்பிடற்பாலது.

இந்துப்பாரம்பரியத்தில் இறைவனது இவ்வடிவம் குருதத்துவச் சிறப்பினை உணர்த்தும். பக்குவப்பட்ட ஆன்மாக்களைக் குருமூர்த்தமாகவேதான் இறைவன் ஆட்கொள்ளும் சிறப்பால் குரு தத்துவம் இறை தத்துவத்துடன் இணைந்து விடுகின்றது. தக்~ணாமூர்த்தியின் அமைதியான யோகநிலை குரு தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. தனது வலது கையினால் சின்முத்திரையைக் காட்டி மோனநிலையில் உபதேசம் செய்யும் நிலை ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக விளங்கும் ஞானநிலையைச் சுட்டும். 'மோனம் என்பது ஞான வரம்பு' என்ற முதுமொழிக்கேற்ப இவ்வடிவம் அமைந்து விளங்குவதாகும். குருவாகத் தோன்றித் தக்~ணாமூர்த்தி சனகாதி நால்வர்க்கும் உயர் சிவஞானத்தை மௌனத்தினாலும் சின்முத்திரையினாலும் உபதேசம் செய்தருளிய திறத்தினால் இம் முனிவர் பரம்பரை 'திருக்கைலாய குரு பரம்பரை' எனக் குறிப்பிடப்படுகின்றது. இறைவன் குருவாகத் தோன்றிக் குருந்த மரத்தடியில் அமர்ந்து யோகநிலையில் தமக்கு உண்மை உபதேசம் செய்தருளியமை பற்றிய மணிவாசகரின் அனுபவமும் குறிப்பிடற்பாலது.

அதே போலவே இயேசுக் கிறிஸ்துவும் தனது இறுதி இராப் போசனத்தின் போது பன்னிரு சீடர்களினதும் கால்களை தானே கழுவி இராப் போசனத்திற்கு அழைத்துச் சென்றார். இது யூதர் வம்சத்தினரிடைய அடிமைகளே இவ்வாறு விருந்தினர்கள் வரும் போது கால்களை கழுவி விடும் வழக்கம் காணப்பட்டது. அதன் மூலமாக ஏழ்மை தூய்மை கற்பு என்பதனை விளக்கும் வகையில் தனது குருத்துவநிலையை வெளிப்படுத்தியிருத்தமையை காணக் கூடியதாகவுள்ளது. இயேசு கிறிஸ்து போஜனத்தை விட்டெழுந்து வஸ்திரங்களை கழற்றி வைத்துவிட்டு ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக் கொண்டு பின்பு பாத்திரத்திலே தண்ணீர் வார்த்து சீடருடைய கால்களைக் கழவவும் தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். (யோவான் 13: 4-5) ஆகவே ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கும் பொழுது சைவத்திலும் கிறிஸ்தவத்திலும் இறைவனுக்கும்; மனிதனுக்கும் இடையிலான உறவுநிலையில் இரண்டு சமயத்தினதும் கருத்தமைவு ஒன்றாகவே காணப்படுகிறது.

**குருத்துவமும் வர்ணக்கோட்பாடு**

சைவ சமயத்தினை அடிப்படையாக எடுத்து நோக்கும்போது குருத்துவம் என்கிற அடிப்படையில் பிராமணருக்கே உரித்தான தன்மையானது காணப்படுகின்ற போது சைவ சமயி என்கிற அந்தஸ்தினை பெறுவதற்கு சமய தீட்சை ஆனது தற்காலத்தில் வழங்கப்பட்டு வருகின்ற தன்மையயை காணக் கூடியதாகவுள்ளது. அதே போலவே மடங்கள் ஆதினங்களில் இந்த முறையானது பெரு மாற்றத்தினை பெற்று வருகின்றமையை காணக் கூடியதாகவுள்ளது. அதாவது உண்மையாக இறை விசுவாசிகள் மடங்களிலும் ஆதினங்களிலும் இணைக்கப்பட்டு அவர்களுக்கான குருத்துவநிலையினை வழங்கி இறை பூசையினை நிகழ்த்தும் தன்மையை காணக் கூடியதாகவுள்ளது. இது ஒரு ஆகமம் சாராத வழிபாட்டு முறைக்குள் அமைவுறுவதனை காணக் கூடியதாகவுள்ளது. அதே போலவே கிராமிய வழிபாடுகளில் கலையோறி இறை உரு ஏறி ஆடுகின்ற தன்மையயும் அந்த குருத்துவநிலையின் தன்மையை போவே அமைவுறுகின்றது. இதுவும் ஒரு ஆகமம் சாராத வழிபாட்டு முறையில் உள்ளடங்குவதனை கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதே போலவே ஆரம்ப காலங்களில் அதாவது 1ஆம் 2ஆம் நூற்றாண்டுகளில் லோவிய குருத்துவம் இருந்தாலும் குடும்பக் குருத்துவமே தொடர்ந்து காணப்பட்டது (நீதி 6:18-290) சாமு 7:1) அதன் பின்னர் முடியாட்சிக் காலத்தில் அரசர்கள் குருத்துவப்பணி ஆற்றினார்கள். சவுல் தாவீது தொடக்கம் ஆகாசு ஈறாக அரசர்கள் பலிப் ஒப்பு கொடுத்தார்கள். பின்னர் கிறிஸ்தவத்திற்கென சொத்துக்கள் சேர தொடங்கியது அதாவது ஆலயங்கள் நிலங்கள் போன்ற வேறு வேறு சொத்துக்கள் சேர்ந்த வேளையில் குருத்துவப் பணி வாழ்வானது இயேசுக் கிறிஸ்துவிடம் மக்களுக்கான பணிவாழ்விற்காக பலி ஒப்பு கொடுத்த பின்னர் குடும்ப வாழ்வில் இருந்து பலியொப்பு கொடுத்தலை நேர்மையாக செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படவே மணத்துறவு என்கிற நிலையானது இங்கு ஏற்படலாயிற்று. இவ்வாறு மணத்துறவினை தனது வாழ்வில் கடைப்பிடித்து இறை விசுவாசியாக இருக்கும் திருமுழுக்குப் பெற்ற எவரும் ஒரு சிறத்த குருத்துவ வாழ்வில் பங்கெடுத்து கொள்ள முடியும்.

ஆகவே ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கும் பொழுது சைவத்திலும் கிறிஸ்தவத்திலும் குருத்துவ வாழ்வினை தமது வாழ்வினை இறைவனுக்காகவும் மக்களுக்காகவும் அர்பணிக்கும் நிலையில்

இரண்டு சமயத்தினதும் கருத்தமைவு ஒன்றாகவே காணப்படுகிறது.

**கடமையைக் கடமையாக செய்**

மனித இனத்தை சைவ குல அடிப்படையில் நான்காக வகைப்படுத்துகின்றது. அவை முறையே பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் ஆகும். அவர்கள் அவர்களுக்கென்று குல தர்மத்தையே அவர்கள் செய்ய வேண்டுமென பகவத்கீதை வலியுறுத்துகிறது. அவ்வாறு அவர்கள் குல தர்மத்தின் அடிப்படையில் செயற்படுகையில் ஒப்பற்ற விடுதலையை அடைவார்கள் என பகவத்கீதை குறிப்பிடுகின்றது.

எடுத்துக்காட்டாக :- சத்திரியன் ஒருவன் நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் மக்களைக் காக்க வேண்டும் தேவை ஏற்படின் போர் புரிய வேண்டும் போர் புரிகின்ற போது ஏற்படும் அழிவுகளையோ சிரமங்களையோ கருத்தில் கொள்ளக்கூடாது அவற்றை பொருட்படுத்தாது செயற்படுவதே குலதர்மம் ஆகும். வைசியன் வாணிபத்தொழிலைச் செய்யவேண்டும். அவை அற அடிப்படையில் நிகழ்த்தப்படல் வேண்டும். கொடுப்பதும் எடுப்பதும் சமநிலையில் இருக்க வேண்டும். இவ்வாறாக குலத்துக்குரிய கருமங்கள் பகவத்கீதையில் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பெரும்படியான மனித வகையீட்டை கிறிஸ்தவத்திலும் காணக் கூடியதாகவுள்ளது. மனிதனுக்கு தேவையான விவகாரங்களை முகாமை படுத்துபவர்கள் அவர்கள் ஆட்சியாளராக இருந்தால் என்ன? மதபோதகராக இருந்தால் என்ன? வணிகரானால் என்ன? எடுபிடி வேலை செய்பவர் ஆனாலும் என்ன? அதற்கதற்கென கடுமையான ஒழுக்க கடைப்பிடிப்புக்களோடு தமது கடமையைச் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது.

எனவே இங்கு வகையீடுகள் முக்கியத்துவம் பெறாது அவர்களுக்குரிய கடமையை ஒழுக்க விழுமியங்களை ஓம்பியவாறே மேற்கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தமைவை இரு சமயங்களிலும் குறிப்பிடுவதன் மூலம் இவ்விரு சமயங்களும் கடமையைக் கடமையாகச் செய் என்கின்ற கருத்தமைவை ஒரு முகமாகவே போதிக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ளலாம். மேலும் கடமையைக் கடமைக்காகச் செய்யும்போது அதற்குரிய பலாபலன்கள் செய்பவர்களால் நிச்சயப்படுத்தப்படாது எல்லோரினதும் மேற்பார்வையாளனாகிய இறைவனாலேயே கணக்கிடப்படும். ஏன்கிற அடிப்படையில் இரு சமயத்தினதும் கருத்தமைவும் ஒன்றுபடுகின்றமையை காணக் கூடியதாகவுள்ளது.

**கடமை மூலம் கடவுள்**

மனித இனத்தை நான்கு வர்ணங்களாகப் சைவ சமயத்தில் வகைப்படுத்திக் காட்டியிருந்தாலும் ஒன்றிலிருந்து மற்றொன்று மேலானது என்று குறிப்பிடவில்லை. ஒவ்வொன்றும் சம அந்தஸ்துடனே மதிக்கப்படுகின்றது. கடமையைக் கடமைக்காகச் செய் என்ற அடிப்படையில் செயற்பட்டு கொண்டிருப்பவன் நிச்சயமாக இல்லறத்தவனாக இருந்தால் என்ன? துறவறத்தவனாக இருந்தால் என்ன? அவன் விடுதலைக்கு வழி சமைத்தவர் ஆகிறான். இங்கு பற்றற்ற செயற்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. கிறிஸ்தவத்தை பொறுத்தவரை இல்வாழ்க்கை போற்றினாலும் அவ் இல்வாழ்க்கையே ஆன்மீக வாழ்வாக அமைய வேண்டும் எனக் குறிப்பிடத் தவறவில்லை. மனிதனைப் பொறுத்தவரை மூன்று கூறுகளால் ஆனவன் அவை முறையே கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு ஆகியவற்றில் பங்கேற்று முதற் சீடர்களைப் போன்று 'பெந்தக்கோஸ்தே' அனுபவத்தைப் பெறுவதாகும். இதில் ஆன்மீகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வது தூய்மைப்படுத்திக் கொள்வது வளர்ச்சியுறச் செய்வது முக்கியமானது இவ்வுலக வாழ்விலேயே பாவங்களை மன்னிப்பதற்காக பாதிரியார்களுக்கு அருள் கொடையாக அவர்கள் பலியாக அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனைக் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. அந்த வகையில் அவ்வுலக வாழ்வில் ஒருவருடைய பாவம் ஆனது பாதிரியாரால் மன்னிக்கப்படாது விட்டால் அது எப்பொழுதும் மன்னிக்கப்பட மாட்டாது என எடுத்தியம்பப்படுகின்றது. அந்த வகையில் பாவம் செய்யதவர் தான் செய்த பாவத்தை நினைத்து மனம் திருந்தி உணர்ந்து மீண்டும் அவ்வாறான பாவத்தினை செய்ய மாட்டேன் என்ற உறுதியின் உடனே பாதிரியாரிடம் பாவ மன்னிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். என எடுத்தியம்பப்படுகின்றது. ஆகவே ஒப்பிட்டு நோக்கிப் பார்க்கும் பொழுது சைவத்தில் பற்றற்று கடமையை கடமையாக செய்வதன் மூலம் இறை அனுக்கிரகத்தை பெற முடியும். கிறிஸ்தவத்தில் பாவங்கள் செய்தவர்கள் அதனை உணர்ந்து மனம் திருத்துதல் மூலம் இறை அனுக்கிரகம் பெற முடியும். என எடுத்தியம்புவதன்

ஊடாக இரண்டு சமயத்தினதும் கருத்தமைவு ஒன்றாகவே காணப்படுகிறது.

**நிறைவுரை**

மனிதகுல ஆரம்பகாலத்தில் அவனது வாழ்வியலில் தனது ஆற்றலுக்கும் மேலான சக்தி ஒன்று இருந்தவாறாய்த் தன்னை வழிநடத்துகின்றது என்று கண்டுகொண்டான் இதனடிப்படையில் அச் சக்தியைத் தனக்காய் வருடிப்பதன் மூலமும் வணங்குவதன் மூலமாயத்; தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என நம்பினான். இவ்வாறான வழிபாடு ஓர் ஒழுங்கமைப்பில் ஒரு கால நிர்ணய அமைப்பில் இடம்பெற வேண்டுமென்றும் கண்டுகொண்டான். கால ஓட்டத்தில் இதுவே சமயங்களாக பரிணமித்தன. வெவ்வேறு மொழி பேசும் இனக் குழுமங்கள் மொழிக்குழுமங்கள் உலகில் காணப்பட்டமையால் அவை ஒவ்வொன்றும் தனித்துவமான கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு அதன்படி பல சமயங்கள் உருப்பெற்றன. இவ்வாறான உலகில் பல சமயங்கள் தோற்றம் பெற்றன. ஆரம்ப காலத்தில் இவை ஒவ்வொன்றும் இணக்கப்பாட்டுடனும் இசைவுப்பாட்டுடனும் இயங்கிவந்தன. கால ஓட்டம் பொருளாதார வேறுபாடுகளை ஏற்படுத்தி ஏற்றத்தாழ்வுகளை உண்டுபண்ணி சமயங்களிடையே சமத்துவமான சகோதரத்துவமான போக்கிற்கு கேள்வியாகியது. நல்வாழ்வுக்காகக் கண்டுகொண்ட சமயங்கள் கால ஓட்டத்தில் உலக மக்களிடையேயான சமத்துவத்திற்கும் சகோதரத்துவத்திற்கும் கேள்வியாக அமைந்து ஏற்றத்தாழ்வுகளை உண்டுபண்ணி போருக்கும் பூசலுக்கும் காரணமாயின. ஒவ்வொரு சமயங்களினதும் ஆப்தங்களை ஆராய்ந்து பார்க்கின்ற போது அவை கூறப்படும் வழிபாட்டு முறைகளைக் காட்டிலும் குருத்துவ நிலையில் பெரிதும் ஒத்துப் போகின்ற தன்மை மேலோங்கிக் காணப்படுகின்றன. எனவே சைவ சமயத்தில் குருத்துவநிலை கிறிஸ்தவ சமயத்தில் குருத்துவ நிலை என்கிற கருத்துக்கள் மிகப் பெரும்பாலான ஒத்த கருத்துக்களை ஒப்பீடு செய்து வெளிப்படுத்துவதன் மூலம் சமயங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். இது சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அடிப்படையாக அமையும்.

**உசாத்துணை நூல்கள்**


¬ அண்ணா உரை.(1975) ஸ்ரீ குருகீதை ஸ்ரீ இராம கிருஸ்ண மடம் வெளியீடு.

¬ அரங்கசாமி இரா. 2004 “பகவத்கீதை தெளிவை நோக்கி” காவ்யா பதிப்பகம் கோடம்பாக்கம் சென்னை.

¬ இருக்கு வேதம் ஓ: 109

¬ இரத்தினசிங்கம் சி. வா. (2005) உலக மதங்கள் 40ஐப் பற்றிய அரிய தகவல்கள்

¬ கமலநாதன் செ. (2006) “இந்து பண்பாட்டு வரலாறு – 1” சேம மேடு பதிப்பகம்.

¬ கணேசலிங்கன் செ. (2009) “இந்து நாகரீக வரலாறு” சேம மேடு பதிப்பகம்..

¬ கோபாலகிருஸ்ண ஐயர். ப. (2023) இந்துப்பண்பாட்டு மரபுகள் சேமமடு பதிப்பகம்.

¬ சுப்பிரமணிய பாரதி சி. (2008) பாரதி நூல்கள் - வசளங்கள் தேவ ரிஷிகளின் கவிதை.

¬ சிவானந்தமூர்த்தி க. (2014) சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல் அம்பாள் வெளியீட்டகம் புத்தூர்.

¬ தாமோதரன் ரா.தி. (20005) அகோரசிவாரச்சாரியாரின் ஆகமதிட்~hவிதி தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு.

¬ அருள்ராஜ் இலா. (2001) குருத்துவ அழைத்தல் என்னும் இறையழைத்தல் இதய வெளியீடுகள் சென்னை.

¬ அந்தோணிசாமி எஸ்.ஜே. (2001) இயேசு நம் குரு இதய வெளியீடுகள் சென்னை.

¬ இம்மானுவேல். ஏஸ்.ஜே. (2018) குருத்துவம் ஒரு ஒப்பற்ற பணி வாழ்வுக்கான அழைத்தல் இதய வெளியீடுகள் சென்னை.

¬ கத்தோலிக்க திருமறை (2018) தரம் 11 கல்வித் திணைக்கள வெளியீடு.

¬ கத்தோலிக்க திருமறை *(2018)* தரம் *8* கல்வித் திணைக்கள வெளியீடு.

¬ தேவராஜ். ஏஸ். *(2001)* குருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை இதய வெளியீடுகள் சென்னை.

¬ பரிசுத்த வேதாகமம். *(2015)* தி பைபிள் சொசைட்டி ஒப் இந்தியா வெளியீடு.

¬ பீட்டர் அமீர். ஆ. *(2001)* பணிக் குருத்துவமும் மணத்துறவும். இதய வெளியீடுகள் சென்னை.

¬ வலண்டின் ஜோசப். கு. குருத்துவ இறையியல் (அர்ச்சனையாகும் உறவுப் பூக்கள்) இதய வெளியீடுகள் சென்னை.

¬ மதுரை ஆனந்த் *(2001)* குருத்துவ இறையியல் இதய வெளியீடுகள் சென்னை.

¬ மதுரை ஆனந்த் *(2001)* பணிக் குருத்துவம் இதய வெளியீடுகள் சென்னை.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com